12th March 1966]

திரு. து. ப. அழகமுத்து : பம்ப் செட்டுகள் வாங்கி வைத்த பிறகு மின்சார கனெக்ஷன் கிடைக்காத காரணத்தினால் அதைப் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது. மின்சார கனெக்ஷன் கிடைப்பதற்குள்ளே கொடுத்த கடனை விவசாயிகளிடமிருந்து திரும்ப வசூலிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆகையால், மின்சார கனெக்ஷன் கிடைக்காத இந்தக் குறையைப் போக்கு வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : The Government of India have been addressed for assistance for rural electrification also. இது சம்பந்தமாக மத்திய சர்க்காரினுடைய உதவியைக்கேட் டிருக்கிறோம்.

திரு. எஸ். முருகையன் : ஹரிஜன நல இலாக்காவிலே ஹரிஜனங் களுக்குக் கிணறு வெட்டுவதற்காகக் கொடுக்கப்படுகின்ற தொகை சப்ஸிடியாகக் கொடுக்கப்படுகிறது. அதுபோல் ஹரிஜனங்களுக்கு பம்ப் செட்டுக்குத் கொடுக்கும்போது கடனுக அல்லாமல் சப்ஸிடியாகவே கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டம் வைத்திருக் கிறதா ? அப்படி இல்லையென்றால் இனிமேலாவது இதுபோன்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ரூ. 1,500 கிணறுகளுக்காக இனமாகக் கொடுக்கிறோம். பம்ப் செட்டுகள் வைத்திருக்கிறவர்கள் போரிங் போட்டு தண்ணீர் எடுப்பதில் அந்தச் செலவு குறைவாக இருந் தால் பார்க்கலாம்.

* 258 கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1965 ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் முடிய விவசாயி களுக்குத் தவணை முறையில் எத்தனை டிராக்டர்கள் வழங்கப் பட்டன ?

(இ) எந்தெந்த கம்பெனிகள் மூலமாக என்னென்ன டிராக்டர் ரகங்கள் வழங்கப்பட்டன ?

(உ) மேற்படி டிராக்டர் ஒன்றுக்கு என்ன விலை ஆகிறது ?

(எ) விவசாயிகளுக்குச் சலுகை காட்டும் வகையில் அவை களை அடக்க விலையில் குறைத்துக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) முதல் (எ) வரை : சபை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்த மேஸி பர்கூஸன் டிராக்டர்களுக்குத்தான் கடன் வழங்கப்படுகிறது, ஆனல், இதை ரிப்பேருக்குக் கொண்டுபோகும்போது, மற்ற

---

a 112–113ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கம்பெனிகளைவிட இதற்கு அதிகமாக சார்ஜ் கேட்கிறார்கள். ஸ்பேர் பார்ட்ஸ் விலை மிகக் கூடுதலாக இருக்கிறது. இதைக் குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்குத் தனியாகத்தான் கேள்வி வேண்டும்.

திரு. மா. தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் இதுவரை 88 டிராக்டர்கள் வழங்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. டிராக்டர்கள் வேண்டும் என்று கோரி வந்த விண்ணப்பங்கள் எத்தனை ? அவற்றில் எத்தனை கொடுக்கப்பட்டிருக்கின்றன ? மீதி இன்னும் எத்தனை டிராக்டர்கள் கொடுக்கப்பட வேண்டும் ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் இப்போது என்னிடம் இல்லை.

திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம் : ஸார், நவீன முறையில் விவசாயிகளை முன்னேற்றுகின்ற அடிப்படையில் விவசாயிகளுக்கு எளிய முறையில் டிராக்டர்கள் கிடைப்பதற்கு தகுந்த வகையில் ஏதாவது சப்ஸிடி அரசாங்கத்திலிருந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : டிராக்டர்கள் வாங்குபவர்கள் கொஞ்சம் சொத்து உள்ளவர்களாகத்தான் இருக்க முடியும். ஆகவே, இவர்களுக்கு சப்ஸிடி கொடுக்கவேண்டும் என்பது அவசியமில்லை.

திரு. செ. மாதவன் : சிறிய நிலப்பரப்பு உடைய உழவர்களுக்கு தங்கள் நிலங்களை உழுதுகொள்ளக்கூடிய வகையில், சிறிய அமைப்பில் இயந்திரக் கலப்பைகளை வாங்கிக் கொடுப்பதற்கு அரசாங்கத்திடத்தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா ? அப்படியானால் வெளிநாடுகளிலிருந்து இப்படிப்பட்ட இயந்திரக் கலப்பைகள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா ?

கனம் திரு. பூ. கக்கன் : ரஷ்ய டிராக்டர்கள் 14 ஹார்ஸ் பவர், 28 ஹார்ஸ் பவர், 40 ஹார்ஸ் பவர் என்ற அளவில் இருக்கின்றன. இவற்றையும் வரவழைத்துக் கொடுக்கலாம் என்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.

திரு. மா. தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஜப்பானிலிருந்து குபட்டா வாக்கின் டிராக்டர்களை 3,000 ரூபாய் விலையில் வாங்கி உபயோகித்துக்கொள்ளலாம் என்று கம்பெனி பரீட்சார்த்தமாகக் காண்பித்தார்கள். அதோடு இதை அடுத்த ஆண்டில் வரவழைத்து விவசாயிகளுக்குக் கொடுக்கலாம் என்றும், அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும் என்றும் அதிகாரிகள் கூறினார்கள். இதைப்போன்ற டிராக்டர்களை வரவழைத்துக் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அப்படியெல்லாம் வரவழைப்பதாக இல்லை. வேறு விவரங்கள் என்னிடமில்லை. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்து விவரம் சொல்லலாம்.

12th March 1966]

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, ரஷ்ய டிராக்டர்கள் விலை குறைவாக இருக்கிறது, உண்மை தான். ஆனால், நல்ல முறையில் உழுவதற்கு பெர்கூஸன் டிராக்டர்கள் தான் ஏற்றவை என்று சொல்லுகிறார்கள். இதன் விலை 17 ஆயிரத்துச் சொச்சமாக இருக்கிறது. ரஷ்ய டிராக்டர் விலை குறைவாக இருக்கிறது. ஆகவே இந்த டிராக்டரின் விலை அளவுக்கு பெர்கூஸன் டிராக்டர் விலையையும் குறைக்க எதாவது முயற்சி செய்ய முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அது எப்படி குறைக்க முடியும் ? பெர்கூஸன் டிராக்டர்கள் விலை கூடுதலாகத்தான் இருக்கிறது. அதைத்தான் வாங்கவேண்டும் என்றால் கொஞ்சம் கூடுதலாகப் போட்டுத்தான் வாங்கிக் கொள்ளவேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : இப்படிப்பட்ட டிராக்டர்கள் பெரும் நிலச்சுவாந்தார்களுக்குத் தான் பயன்படும். சிறு விவசாயிகளுக்குப் பயன்படும் அளவில் அங்கே இருக்கின்ற பிர்க்காவுக்கு ஒன்று, அல்லது பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்று என்று கொடுத்து, அதன் மூலமாக விவசாயிகளுக்கு வாடகைக்கு கொடுக்க அரசாங்கத்திடம் எதாவது திட்டம் இருக்கிறதா ? இல்லையென்றால் அப்படி ஒரு திட்டம் வகுக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கலாம் என்று பரீட்சார்த்தமாக பார்க்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் இரண்டு மூன்று இடங்களுக்குக் கொடுக்கலாம் என்றும் அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

Sri C. CHIRANJEEVULU NAIDU : Sir, difficulty has been experienced by the Government in securing Massey Ferguson **Tractors** and supplying them to agriculturists. Have the Government explored the possibility of securing some other tractors?

கனம் திரு. பூ. கக்கன் : பெர்கூஸன் டிராக்டர் இங்கு செய்யப்படுகிறது. இதைத்தான் விவசாயப் பெருமக்கள் அதிகமாக விரும்புகிறார்கள். ஆகவேதான் இதற்கு அரசாங்கம் கடன் கொடுக்கிறது.

திரு. எஸ். முருகையன் : நிதி வசதியுள்ள பஞ்சாயத்து யூனியன்கள் தாங்களாகவே சொந்தமாக டிராக்டர்களை வாங்கி வைத்துக்கொள்ளுகிறோம் என்று தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பினாலும், அவ்விதம் கொடுக்க முடியாது என்று திருப்பி அனுப்பி விடுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் அவற்றிற்கு என்று இருக்கின்ற பணத்திலிருந்து வாங்கிக் கொள்வதற்கு ஏன் மறுப்பு சொல்லவேண்டும் ? இவ்விதம் வாங்கிக் கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பஞ்சாயத்து யூனியன்கள் பல வேலைகளைச் செய்வதற்காகப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு டிராக்டர்கள் வாங்க வேண்டும் என்று சில பஞ்சாயத்து யூனியன்கள் கேட்கிறார்கள். இதர வேலைகளுக்கெல்லாம் இடையூறு இல்லாமல் இருந்தால் அதே நோக்கில் மற்ற வேலைகளுக்கு

இடையூறு இல்லாமல் இதை வாங்கலாம் என்று ரெஜிஸ்டிரார் ஆஃப் கோவாப்பரேடிவ் சொஸைட்டிஸ் ஒத்துக்கொண்டால் அரசாங்கம் அதைப்பற்றிப் பரிசீலிக்கும்.

திரு. சா. கணேசன்: பஞ்சாயத்து யூனியன் டிராக்டர் வாங்கு வதற்கும் ரெஜிஸ்டிரார் ஆஃப் கோவாப்பரேடிவ் சொஸைட்டிஸ் ஒத்துக்கொள்வதற்கும் என்ன சம்பந்தம் என்று புரியவில்லை.

கனம் சபாநாயகர்: அவர்கள் சொல்வது கோவாப்ரேட்டிவ் பார்ம்-களுக்குப் பொருந்தும்.

* 259 கேள்வி—திரு. ஆ. தங்கவேலு: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1965 ஜனவரி முதல் டிசம்பர் முடிய தென்னுற்காடு மாவட்டத்திலிருந்து நிலத்தை சமப்படுத்த வேண்டி புல்டோசர் கேட்டு, மாவட்ட விவசாய உதவிப் பொறியாளருக்கு வந்த விண்ணப்பங்கள் எத்தனை ?

(இ) எத்தனை வேலை முடிவு பெற்றது ?

(உ) கிடைத்த வருமானம் எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) 108.

(இ) 77.

(உ) ரூ. 1,56,650.

திரு. எஸ். ஜே. ராமசாமி: புல்டோஸர்கள் சரியாகக் கிடைப் பதில்லை. இதற்காக விண்ணப்பம் செய்து மூன்று நான்கு வருடங் களுக்குப் பின்னுல்தான் கிடைக்கிறது. இது தென் ஆற்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் பரவலாயிருக் கிறது. இதை மாற்றி துரிதமாகக் கிடைப்பதற்கு அரசாங்கம் வழி செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன்: கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது போல் அப்படிப் பல வருடங்கள் ஒன்றும் ஆவதில்லை. மொத்தம் வந்த விண்ணப்பங்கள் 90, அவற்றில் 44 இப்போது பெண்டிங்-காக இருக்கின்றன. இவற்றில் 2 வருடங்களில் இருப்பது 3. ஒரு வருடம் 10, ஆறு மாதம் 15, மூன்று மாதம் 9 இரண்டு மாதம் 7. இந்த அளவில் தான் பெண்டிங்-காக இருக்கிறது. பல வருடங் களாக இல்லை.

திரு. மா. தண்டாயுதபாணி: புல்டோசர் வேண்டும் என்று கேட்டு ஓராண்டு, ஒன்றரை ஆண்டு காலம் ஆனபிறகுதான் கிடைக் கிறது. வேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் கிடைப்பதில்லை. தற்போது விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக நிலத்தைச் செம்மைப்படுத்த இது மிகவும் தேவையாக இருக்கிறது. ஆகவே அதிகமான அளவில் புல்டோசர்களை வரவழைப்பதற்கு அரசாங் கத்திற்கு உத்தேசம் உண்டா ? இப்போது மொத்தம் இருக்கின்ற புல்டோசர்கள் எத்தனை ? அதில் மாவட்ட ரீதியாக எத்தனை வழங் கப்பட்டிருக்கின்றன ?